மென்று ஆர்வம் கொண்டவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். கடந்த காலத்தில் அரசியல் கண்ணோட்டத்தோடு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்ட காரணத்தால் அது நல்ல முறையில் வளர்ச்சியடைய முடியவில்லை. ஆகவே, அதிலே ஈடுபாடு கொண்டவர்கள்தான் தற்போது நியமிக்கப் படுகிறார்கள்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : பழைய சர்க்கார் எந்த முறையில் அந்த போர்டை அமைத்தது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பழைய சர்க்கார் இந்த முறையில்தான் அமைக்க வேண்டுமென்ற விதிமுறைகளை வைத்திருந்தார்கள். ஆனால் முழுக்க முழுக்க ஒரு கட்சியைச் சார்ந்தவர்களே இடம் பெற்றிருந்தார்கள் என்று தெரிய வருகிறது. அப்படியானால் அவர்களுடைய நோக்கம் என்ன என்பதைப் பற்றி அவர்களே ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : காதி இலாகாவில் கடந்த காலத்தில் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டார்கள் என்ற காரணத்தால், கதர்த் துறையில் அபிவிருத்தி ஏற்படாத நிலைமை ஏற்பட்டது என்பதையும், அதைப் போக்கும் முகத்தான் அந்தத் துறையிலே அக்கறையுடைய பல கட்சிச் சார்புடையவர்களையும், அதனுடைய வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற முறையில் சட்டமன்ற உறுப்பினர்களையும் இடம் பெறச் செய்ய வழி வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : ஏற்கனவே இதற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அரசியல் கட்சிகளின் அடிப்படையில் அங்கம் வகிப்பது என்று பட்டால், பின்னர் கருத்து முரண்பாடு ஏற்படும்போது அது ஒரு போராட்டக் குழுவாக ஆகிவிடும். அதிலே அக்கறை கொண்ட சட்டமன்ற உறுப்பினர்களே அந்தக் குழுவிலே நியமிக்கப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பரமசிவம் அவர்களும், திரு. து. ப. அழகமுத்து அவர்களும் காலியான இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தற்போது இதிலே அங்கம் வகிப்பவர்கள் யார், யார் ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : திரு. கே. அருணாசலம், காந்தி அரும்பொருள் காட்சி, மதுரை; திரு. பி. என். பரமசிவம், சட்டமன்ற உறுப்பினர்; திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர், சேலம் மாவட்டம்; திரு. எம். அழகிரிசாமி, மதுரை மாவட்டம்; திரு. ஏ. பி. சி. வீரபாகு, தூத்துக்குடி; திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை, தஞ்சாவூர் மாவட்டம்; திரு. து. ப. அழகமுத்து, சட்டமன்ற உறுப்பினர்; திரு. கோ. வெங்கடாசலபதி, தலைவர், காந்தி நிகேதன் ஆசிரமம், மதுரை மாவட்டம், திரு. கே. பி. வி. கிரி, கோவை மாவட்டம், திரு. கே. ராமலிங்கம், இயக்குநர், குன்னத்தூர் கூட்டுறவு வெல்ல விற்பனைச் சங்கம், கோவை மாவட்டம், திரு. வி. எம். சுந்தரராமானுஜ ரெட்டியார், கடலூர், கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்; திரு குருசாமி நாடார், காந்தி நிகேதன் ஆசிரமம், மதுரை மாவட்டம்.

*201 **வினா—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் போர்டு ஊழியர்கள் சங்கம் அமைத்துக் கொள்வதற்கு அங்கீகாரம் கேட்டு சர்க்காருக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மேல் சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.